இணைய வழியில் இலக்கிய நிகழ்வுகள்: சாகித்ய அகாதெமி ஏற்பாடு

சென்னை, மே 12: சாகித்ய அகாதெமி சார்பில் இணைய வழி இலக்கிய நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

சாகித்ய அகாதெமி சார்பில் பல்வேறு இணைய வழி இலக்கிய நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, கடந்த 9-ஆம் தேதி முதல், இணையதளத்தில் கவிதை வாசிப்பு நிகழ்ச்சிகள் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

இதில் பல்வேறு மொழிகளின் கவிதை வாசிப்பும் இடம்பெறுகின்றன. இதே போல் இலக்கிய சங்கம நிகழ்ச்சிகளும், வருகிற 17 முதல் 30 -ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன. தமிழ், ஹிந்தி உள்பட 24 மொழிகளில் பல்வேறு அமர்வுகள் நடைபெறவுள்ளன. இதில் கதை, கவிதை வாசிப்பு, இலக்கியத் திறனாய்வுக் கூட்டம், படைப்புகளின் விவாத அரங்கம் உள்பட 66 நிகழ்வுகள் இணையம் வழியாக நடைபெறவுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை நேரலையாகவும், சில நிகழ்ச்சிகள் முடிவடைந்தவுடன் அகாதெமியின் யூடியுப், முகநூல் உள்ளிட்ட பக்கங்களில் பதிவேற்றமும் செய்யப்படும். உலக புத்தகத் தினத்தை முன்னிட்டு, கடந்த மாதம் 23-ஆம் தேதியும், ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த நாளையொட்டி, கடந்த 8-ஆம் தேதியும், இணைய வழியில் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

ஆன்லைன் மது விற்பனைக்கு தடை கோரிய வழக்குகள் : உயர்நீதிமன்றத்தில் நாளை விசாரணை

சென்னை, மே 12: பொதுமுடக்கம் முடியும் வரை தமிழகத்தில் டாஸ்மாக் மதுபானக் கடைகளைத் திறப்பதற்கும், ஆன்லைன் மது விற்பனைக்கும் தடை விதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை உயர்நீதிமன்ற தலைமை உள்பட 3 நீதிபதிகள் கொண்ட முழு அமர்வு வியாழக்கிழமை (மே 14) விசாரிக்கிறது.

இதுதொடர்பாக, உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர் சி.குமரப்பன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னை உயர்நீதிமன்றம், தமிழகத்தில் பொதுமுடக்கம் முடியும் வரை டாஸ்மாக் மதுபானக் கடைகளை திறக்கக்கூடாது எனவும் தமிழக அரசு விரும்பினால் மது விற்பனையை ஆன்-லைன் மூலம்மேற்கொள்ளலாம்என அண்மையில் உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையில், ஊரடங்கு முடியும் வரை டாஸ்மாக் மதுபானக்கடைகளை திறக்கக் கூடாது, மதுவை ஆன்-லைனின் விற்பனை செய்ய தடை விதிக்க வேண்டும் என்று கோரி சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 4 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இதனையடுத்து, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி. சாஹி, நீதிபதிகள் வினீத் கோத்தாரி, பி.என்.பிரகாஷ் ஆகியோர் அடங்கிய முழு அமர்வு வரும் வியாழக்கிழமை (மே 14) காணொலி காட்சி மூலம் விசாரிக்க உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணகி நகரில் கரோனா தொற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை

துணை முதல்வர் ஆலோசனை

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடுவீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரியம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கரோனா நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தலைமைச் செயலகத்தில், செவ்வாய்க்கிழமை ஆய்வு நடத்திய தமிழக துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்.

சென்னை, மே 12: சென்னையை அடுத்த கண்ணகி நகர் உள்ளிட்ட குடிசைப் பகுதி மாற்று வாரிய இடங்களில் கரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையை அடுத்த கண்ணகி நகரில் ஏராளமான குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் உள்ளன. இந்த குடியிருப்பைச் சேர்ந்தவர்களில் 20-க்கும் மேற்பட்டோருக்கு கரோனா நோய்த்தொற்று இருப்பது தெரிய வந்துள்ளது. இந்த நிலையில், குடிசைப் பகுதி மாற்று வாரியம் உள்ளிட்ட இடங்களில் நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென அதிகாரிகளை துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டார்.

இதற்காக அவர் அதிகாரிகளுடன் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்-செயலாளர் த.கார்த்திகேயன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

23 பேருக்கு கரோனா பாதிப்பு

சென்னையின் மிகப்பெரிய குடிசை மாற்று வாரியக் குடியிருப்பான கண்ணகி நகர் பகுதியில் முதலில் 12 பேர் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், மேலும் 11 பேருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, அப்பகுதி முழுவதும் தடை செய்யப்பட்டு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கண்ணகி நகரில் நோய்ப் பாதிப்புக்குள்ளானவர்களில் பெரும்பாலானோர் கோயம்பேடு சந்தைக்கு சென்று வந்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களாவர்.

பத்தாம் வகுப்பு தேர்வை நடத்த வேண்டாம்

ஆசிரியர் சங்கங்கள் வலியுறுத்தல்

சென்னை, மே 12: தமிழகத்தில் கரோனா தீநுண்மி தொற்று கட்டுப்பாட்டுக்குள் வராத நிலையில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை நடத்த வேண்டாம். தொற்று நீங்கியதும் மாணவர்களுக்கு பாடங்கள் தொடர்பான நினைவூட்டல் வகுப்புகளை நடத்திய பிறகே தேர்வை நடத்த வேண்டும் என பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

தமிழ்நாடு ஆசிரியர் சங்கம்: பேரிடர் காரணமாக இரண்டு மாதங்களாக வீடுகளில் முடங்கிய மாணவர்களை நேரடியாக தேர்வு எழுதச் சொல்வது அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும். ஒரு தேர்வறையில் 20 மாணவர்கள் தேர்வு எழுதினால் கூட தேர்வு அறைக்கு வரும் போதும், தேர்வு முடிந்து செல்லும்போது தனிநபர் இடைவெளியை எதிர்பார்ப்பது இயலாத காரியம்.

கரோனா தொற்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் மாணவர்களுக்கு நினைவூட்டல், ஆயத்தப் பயிற்சி ஆகியவற்றுக்குப் பின்னர் பொதுத் தேர்வை நடத்த வேண்டும்.

தமிழ்நாடு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகம்: கரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேளையில் சுமார் 9 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் எழுதும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வின் அட்டவணையை அரசு வெளியிட்டிருப்பது ஏற்புடையதல்ல; இது விபரீதமான முடிவாகும்.

தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கம்: பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் ஒரு மாணவனுக்கு நோய்த் தொற்று இருந்தால் கூட அது தேர்வறையில் உள்ள அனைவரையும் பாதிக்கப்படுவர். மத்திய அரசு பள்ளிகளில் ஜூலை மாதத்துக்கு தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று தமிழகத்திலும் கரோனா தொற்று நீங்கிய பிறகே தேர்வை நடத்த வேண்டும்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு: ஒரு பள்ளியில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் தேர்வெழுத வாய்ப்புள்ள நிலையில் அங்கு தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடிப்பது கடினம். தேர்வெழுதும் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் தேர்வை நடத்துவதில் மீண்டும் சிக்கல் ஏற்படும். இதை கருத்தில் கொண்டும் மாணவர்களின் நலன் கருதியும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

விடியோ அழைப்பில் மருத்துவ ஆலோசனை செயலி

பெருநகர மாநகராட்சி அறிமுகம்

சென்னை, மே 12: கரோனா பொதுமுடக்கத்தையொட்டி, வீட்டில் இருந்தபடியே மருத்துவ ஆலோசனை பெறும் வகையில் விடியோ அழைப்புடன் கூடிய செல்லிடப் பேசி செயலியை பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகப்படுத்தியுள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மண்டல சிறப்புக் குழு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னை மாநகராட்சி கரோனா நோய்த் தடுப்பு சிறப்பு அலுவலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தலைமையில் ரிப்பன் மாளிகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, விடியோ அழைப்பு மூலம் மக்களுக்கு மருத்துவ ஆலோசனை அளிக்கும் செல்லிடப்பேசி செயலியை ஜெ.ராதாகிருஷ்ணன் தொடக்கி வைத்தார். இது குறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறுகையில், ‘ பொதுமுடக்கம் அமலில் உள்ள நிலையில் பொதுமக்கள் சாதாரண சிகிச்சைகளுக்காக மருத்துவரையோ அல்லது மருத்துவமனைகளுக்கோ செல்வதற்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டும், கரோனா தொற்று பரவுதலை தடுக்கும் வகையிலும் பெருநகர சென்னை மாநகராட்சி, தனுஷ் ஹெல்த்கேர் என்ற நிறுவனத்துடன் இணைந்து விடியோ அழைப்பு மூலம்மருத்துவ ஆலோசனைபெறும்வகையில்"GCC Vidmed' என்ற செயலியை உருவாக்கி உள்ளது. இச்செயலியைப் பயன்படுத்தி பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான ஆலோசனையை அதற்குரிய மருத்துவரிடம் விடியோ அழைப்பு மூலம் 24 மணி நேரமும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். இதில், கரோனா தொடர்பான அறிகுறி உள்ளவருக்கு உடனடியாக பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம், முதியோர்கள், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகள் தங்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளை எந்தவித சிரமமின்றி வீட்டிலிருந்தே பெற்றுக் கொள்ளலாம் என்றனர். நிகழ்ச்சியில், சிறப்பு குழு அலுவலர் கா.பாஸ்கரன், இணை ஆணையர் பி.மதுசூதன் ரெட்டி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மருத்துவ ஆலோசனைக்காக பிரத்யேகமாக தொடங்கப்பட்டுள்ள செல்லிடப்பேசி செயலியை மக்கள் பயன்பாட்டுக்கு தொடக்கி வைக்கும் சென்னை மாநகராட்சி கரோனா நோய்த் தொற்று தடுப்பு சிறப்பு அதிகாரி ஜெ.ராதாகிருஷ்ணன். உடன் ஆணையர் கோ.பிரகாஷ் உள்ளிட்டோர்.

குவைத்தில் இருந்து வந்த நால்வருக்கு கரோனா

சென்னை, மே 12: குவைத்தில் இருந்து வந்த தமிழர்கள் நால்வருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, அவர்கள் அனைவரும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு கண்காணிப்புக் குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை தாயகம் அழைத்து வரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த வாரம் துபையில் இருந்து 359 தமிழர்கள் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். விமான நிலையத்தில் நடத்தப்பட்ட கரோனா பரிசோதனையில் அவர்களுக்கு வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதால், அவர்கள் அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், குவைத்தில் இருந்து சிறப்பு விமானம் ஒன்று சென்னைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வந்தது. அதில் 107 ஆண்கள், 60 பெண்கள் உள்பட மொத்தம் 186 பேர் வந்திருந்தனர். விமான நிலையத்திலேயே அனைவருக்கும் கரோனா பரிசோதனை செய்யப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் அனைவரும் விடுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். இந்த நிலையில், அவர்களில் நால்வருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மற்றவர்களுக்கு அந்த பாதிப்பு இல்லை என்றபோதிலும், அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மலேசியாவிலிருந்து வருகை: இதனிடையே, மலேசியாவில் இருந்து சிறப்பு விமானம் மூலம் 186 தமிழர்கள் சென்னைக்கு வந்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் விமான நிலையத்திலேயே மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

DIPR/503/DISPLAY/2020

இ-சஞ்சீவனிஓபிடி
eSanjeevaniOPD
STAY HOME OPD

கட்டணமில்லா காணொளி மருத்துவ ஆலோசனை திட்டம்

இணைய முகவரி

https://esanjeevaniopd.in

இச்சேவை அனைத்து தினங்களிலும்
காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை வழங்கப்படும்.

பொதுமக்கள் மருத்துவரின் ஆலோசனைகளை இணையதளத்தின் வழியாக பெறுவதற்கு பின்வரும் வழிமுறைகளை பின்பற்றவும்!

1. http://esanjeevaniopd.in என்ற இணையதளத்தில் கூகுள் குரோம் அல்லது மொஸில்லா ஃபயர் பாக்ஸ் வாயிலாக உள்நுழையவும்.
2. பதிவு உள்ளீட்டில், அலைபேசி எண்ணை தெரிவிக்கவும்.
3. தங்கள் அலைபேசிக்கு வரும் ஒருமுறை கடவு எண்ணை (OTP) உள்ளீட்டில் பயன்படுத்தவும்.
4. நோயாளி பதிவுக்கான விபரங்களை தெரிவிக்கவும்.
5. தங்களது அலைபேசி எண்ணுக்கு அனுப்பப்பட்ட நோயாளி சீட்டு எண்ணை (Token No.) பயன்படுத்தி, நோயாளி உள்ளீடு வாயிலாக உள்நுழையவும்.
6. காத்திருப்பு அறை விண்டோவில், 'தற்போது அழைக்கவும் (Call Now)' என்று வரும்போது அந்த உள்ளீட்டை அழுத்தவும்.
7. மருத்துவரிடம் தங்களது குறைகளை (Complaints) தெரிவித்து ஆலோசனை பெறவும்.
8. மருத்துவரின் மின்னணு பரிந்துரைச் சீட்டை (eprescription) பதிவிறக்கம் செய்து அருகிலுள்ள உள்ள மருத்துவ / மருந்து நிலையங்களில் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவும்.

குரல்வழிச் சேவை INTERACTIVE VOICE RESPONSE SYSTEM 94999 12345 www.stopcorona.tn.gov.in

Oushadhi
The Pharmaceutical Corporation (I.M.) Kerala Ltd.
(A Govt. of Kerala Undertaking)
Kuttanellur, Thrissur-14, Kerala
Ph: 0487- 2459841, 2459842, 2459807
Email: purchase@oushadhi.org

Re-E-Tender Notice

P2/101/20-21 13.5.2020

Online tenders are invited for the supply of **I)** 'Pasuvin Moru' **8th June 2020 to 30 September 2020** and **II)** 'Containers & Packing Materials' for the period **8th June, 2020 to 31st March 2021.** Tenders can be downloaded from the website **www.etenders.kerala.gov.in** For more details please visit our website **www.oushadhi.org** or contact our Purchase Division at Kuttanellur.

(Sd/-)
Thrissur Managing Director

Chola Enter a better life murugappa
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்', 2, என்.எஸ்.சி.போஸ் சாலை, பாரிமுனை, சென்னை - 600 001.
Tel.: 044 40907172; Fax:044 25346464.
Email: investors@chola.murugappa.com
Website: www.cholamandalam.com
CIN: L65993TN1978PLC007576

அறிவிப்பு

இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியலிடும் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள், 2015, நிபந்தனை 47(1)ன் படி 31 மார்ச், 2020 தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்காக, நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுக்கூட்டம் புதன்கிழமை, 3 ஜூன், 2020 அன்று நடைபெறும். மேற்கண்ட அறிவிப்பு கம்பெனியின் www.cholamandalam.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனங்களின் www.bseindia.com மற்றும் www.nseindia.com என்ற இணையதளங்களிலும் வெளியிடப்படும், என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர் குழுவின் ஆணைப்படி
ப.சுஜாதா
சென்னை நிறுவன செயலாளர்
12 மே, 2020

வரி விளம்பரம்

கரையான் ஒழிப்பு

கரையான், கரப்பான், கொசு, மூட்டைப் பூச்சி, எலி, மற்றும் இதர பூச்சிகளை ஒழிக்க 93847 25836, 9381039231.
www.citypestcontrolservices.net
CL00321383

வெள்ளிதோறும் தினமணியுடன்...
வெள்ளி மணி
ஆன்மீகச் சிலிர்ப்பு
ஜோதிடச் சிறப்பு
இரண்டும் இணைந்த வண்ண இணைப்பு

படிவம் G
விருப்ப வெளிப்பாட்டுக்கான அழைப்பு
(திவால் மற்றும் நொடிப்புநிலை (பெருநிறுவனங்களின் திவால் தீர்மான செயல்முறை) ஒழுங்குமுறைகள் ' 2016 ன் ஒழுங்குமுறை 36A(1) ன் கீழ்)

பொருத்தமான விபரங்கள்

1.	பெருநிறுவன கடன்தாரர்	ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட்
2.	பெருநிறுவன கடன்தாரர் இணைவு தேதி	1992 ஏப்ரல் 01
3	பெருநிறுவன கடன்தாரர் இணைவு / பதிவு உள்ள அதிகார மையம்	பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம், நிறுவனங்களின் பதிவாளர், மும்பை
4.	பெருநிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட கடன் பொறுப்புக்கான பெருநிறுவன அடையாள எண்	L99999MH1992PLC066213
5.	பெருநிறுவன கடன்தாரரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலகம் (ஏதேனும் இருப்பின்) ஆகியவற்றின் முகவரி	பதிவு அலுவலகம் - சிரோயா சென்டர், சாஹார் ஏர்போர்ட் சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400099 முதன்மை அலுவலகம் - ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட், க்ளோபல் ஒன், 3 வது தளம், 252, LBS மார்க், குர்லா (மேற்கு), மும்பை – 400 070
6.	பெருநிறுவன கடன்தாரரின் திவால் ஆரம்ப தேதி	2019 ஜூன் 20
7.	விருப்ப வெளிப்பாட்டுக்கான அழைப்பு தேதி	2020 மே 13 (4 வது சுற்று) பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் விளம்பரம் மற்றும் நிறுவன வலைதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது
8.	சட்டம் 25(2)(h) ன் கீழான தீர்மான விண்ணப்பதாரர்களின் தகுதி விபரங்கள் கிடைக்கப்பெறுவதற்கான வலைதளம்	வலைதளம் www.jetairways.com ல் உள்ள விருப்ப வெளிப்பாட்டுக்கான விரிவான செயல்முறை ஆவணத்தில் தகுதி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அல்லது மின்னஞ்சல் fly.JetAirways@in.gt.com க்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.
9.	பிரிவு 29A ன் கீழ் பொருந்தத்தக்க தகுதி விபரங்கள் கிடைக்கப்பெறுவதற்கான வலைதளம்	IBBI ன் வலைதளம் https://ibbi.gov.in/legal-framework/) ல் கிடைக்கப்பெறலாம் அல்லது மின்னஞ்சல் fly.JetAirways@in.gt.com க்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.
10	விருப்ப வெளிப்பாடு பெறப்படுவதற்கான கடைசி தேதி	2020 மே 28
11	உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிட்டுக்கான தேதி	2020 ஜூன் 02
12	தற்காலிக பட்டியலுக்கான ஆட்சேபனைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	2020 ஜூன் 07
13	உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதி பட்டியல் வெளியிட்டுக்கான தேதி	2020 ஜூன் 10
14	உத்தேச தீர்மான விண்ணப்பதாரர்களுக்கு தீர்மான திட்டங்களுக்கான வேண்டுகோள் மற்றும் எவேல்யூசன் மேட்ரிக்ஸ், தகவல் குறிப்பாணை ஆகியன வழங்குவதற்கான தேதி	2020 ஜூன் 02
15	தீர்மான திட்டம், எவேல்யூசன் மேட்ரிக்ஸ், தகவல் குறிப்பாணை மற்றும் மேற்கொண்ட தகவல் ஆகியவற்றை பெறுவதற்கான முறை	உத்தேச தீர்மான விண்ணப்பதாரருடன் மின்னணு வடிவில் பகிர்ந்து கொள்ளப்படும்.
16	தீர்மான திட்டங்கள் சமர்ப்பிக் கடைசி தேதி	2020 ஜூலை 11
17	தீர்மான தொழில்முறையாளர்களுக்கு தீர்மான திட்டங்கள் சமர்ப்பிக்கும் முறை	முத்திரையிட்ட உறையிலிட்டு தபாலிலோ / நேரடியாகவோ மற்றும் எண்ணியல் நகலாக பென் ட்ரைவ் மூலம் தீர்மான தொழில்முறையாளருக்கு கொடுக்கப்பட வேண்டும்.
18	தீர்மான திட்டத்தை தலைமை அதிகாரியிடம் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்ட தேதி	2020 ஜூலை 23
19	தீர்மான தொழில்முறையாளர் பெயர் மற்றும் பதிவு எண்	திரு. ஆஷிஷ் சாவ்ச்சார்யா IBBI/IPA001/IP-P00294/2017-18/10538
20	வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவாறான தீர்மான தொழில்முறையாளர் பெயர், முகவரி மற்றும் மின்னஞ்சல்	திரு. ஆஷிஷ் சாவ்ச்சார்யா A: கிராண்ட் தோர்ன்டொன், 10c ஹங்கர்ஃபோர்டு தெரு, கோல்கத்தா - 700 017 மின்னஞ்சல் - ashish.chhawchharia@in.gt.com
21	தீர்மான தொழில்முறையாளருடனான தகவல் தொடர்புக்காக பயன்படுத்தப்பட வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல்	ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட், க்ளோபல் ஒன், 3 வது தளம், 252, LBS மார்க், குர்லா (மேற்கு), மும்பை – 400 070. மின்னஞ்சல் - fly.JetAirways@in.gt.com
22	மேலும் விபரங்கள் கிடைக்கப்பெற	பெருநிறுவன கடன்தாரரின் வலைதளம் : www.jetairways.com அல்லது மின்னஞ்சல் : fly.JetAirways@in.gt.com ல் கிடைக்கப்பெறலாம்.
23	படிவம் G பிரசுர தேதி	2020 மே 13 (4 வது சுற்று)

ஒப்பம்/-
திரு. ஆஷிஷ் சாவ்ச்சார்யா
(IBBI/IPA-001/IP-P00294/2017-18/10538)
ஜெட் ஏர்வேஸ் (இந்தியா) லிமிட்டெட் - க்கான தீர்மான தொழில்முறையாளர்,
மின்னஞ்சல் : RP.JetAirways@in.gt.com
IBBI உடன் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் மின்னஞ்சல் -
கிராண்ட் தோர்ன்டொன், 10c ஹங்கர்ஃபோர்டு தெரு, கோல்கத்தா - 700 017
மின்னஞ்சல் - ashish.chhawchharia@in.gt.com

தேதி - 2020 மே 13
இடம் - மும்பை